Puducherry Regional

BulletinTamil

27.3.2024 18.10hrs

வணக்கம்

ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : செங்கேணி பழனி

தேதி : 27.3.2024 – புதன்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

தமிழ்நாடு – புதுச்சேரி உட்பட, 21 மாநிலங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில், ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெற உள்ள முதல்கட்ட மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல், இன்று பிற்பகல் 3 மணியுடன் முடிவிற்கு வந்துள்ளது.

13 மாநிலங்களைச் சேர்ந்த 89 தொகுதிகளில், ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள, 2ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல், நாளை தொடங்க உள்ளது.

வாக்காளர்கள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கான பல்வேறு தேர்தல் நடைமுறைகளை எளிதாக்க, தேர்தல் ஆணையம், தகவல் தொழில்நுட்பத்தை, விரிவான அளவில் பயன்படுத்தி வருகிறது.

புதுச்சேரியில், தேர்தல் நியாயமாகவும், அமைதியாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்த, தேர்தல் ஆணையம், பொதுப் பார்வையாளர் ஒருவரையும், காவல் பார்வையாளர் ஒருவரையும் நியமித்துள்ளது.

*மனுதாக்கல்-1 (18)*

தமிழ்நாடு – புதுச்சேரி உட்பட, 21 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில், அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ள மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று பிற்பகல் 3 மணியுடன் முடிவிற்கு வந்துள்ளது. கடைசி நாளான இன்று மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. நிதின் கட்கரி, மத்தியபிரதேஷ் மாநிலம் நாக்பூர் மக்களவைத் தொகுதியில் வேட்புமனு தாக்கல் செய்தார். தமிழகத்தில், கோவையில் பிஜேபி வேட்பாளர் திரு. அண்ணாமலை, நீலகிரியில் திமுக வேட்பாளர் திரு.ஆ.ராசா, கன்னியாகுமரியில் காங்கிரஸ் வேட்பாளர் திரு. விஜய் வசந்த், சிதம்பரத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் திரு. தொல் திருமாவளவன் உள்ளிட்டோர் வேட்புமனு தாக்கல் செய்தனர். புதுச்சேரி மக்களவைத் தொகுதியில், காங்கிரஸ் வேட்பாளர் திரு. வைத்திலிங்கம் இன்று தமது வேட்புமனுவை தாக்கல் செய்தார். முன்னாள் முதலமைச்சர் திரு. வி. நாராயணசாமி, மாநில திமுக அமைப்பாளரும், எதிர்கட்சித் தலைவருமான திரு. ஆர்.சிவா, சட்டமன்ற உறுப்பினர் திரு. வைத்தியநாதன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் முதன்மைச் செயலர் திரு. தேவ பொழிலன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். தமிழ்நாடு, புதுச்சேரி உட்பட, முதல் கட்ட மக்களவைத் தேர்தல் நடைபெற உள்ள

*மனுதாக்கல்-2 (5)*

மாநிலங்களில் வேட்புமனு பரிசீலனை நாளை நடைபெறும். ஏற்கப்பட்ட மனுக்களை விலக்கிக் கொள்ள வரும் 30ஆம் தேதி கடைசி நாளாகும்.

ஆயினும், பீகார் மாநிலம் கயா, நவாடா, ஔரங்காபாத், ஜமுயி மக்களவைத் தொகுதிகளில், அடுத்த மாதம் 19ஆம் தேதி நடைபெற உள்ள தேர்தலுக்கு, வேட்பு மனு தாக்கல், நாளையுடன் முடிவடைய உள்ளது.

*இரண்டாம் கட்டம் (14)*

13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 89 தொகுதிகளில் ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள 2ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை, நாளை வெளியிடப்பட்டு, வேட்புமனு தாக்கல் தொடங்க உள்ளது. கேரளத்தில் 20 தொகுதிகள், கர்நாடகத்தில் 14, ராஜஸ்தானில் 13, மகாராஷ்டிரா மற்றும் உத்தரப் பிரதேசத்தில் தலா 8, மத்திய பிரதேசத்தில் 7, அஸ்ஸாம் மற்றும் பீகாரில் தலா 5, சத்தீஸ்கர் மற்றும் மேற்கு வங்கத்தில் தலா 3 தொகுதிகளிலும், ஜம்மு-காஷ்மீர், திரிபுரா மற்றும் மணிப்பூரில் தலா 1 தொகுதியிலும், இந்த 2ஆம் கட்டத்தில் தேர்தல் நடைபெறும். 2ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய ஏப்ரல் 4ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும். மறுநாள் 5ஆம் தேதி ஜம்மு – காஷ்மீர் தவிர இதர மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், வேட்பு மனு பரிசீலனை நடைபெறும். ஜம்மு – காஷ்மீரில் வேட்புமனு பரிசீலனை ஏப்ரல் 6ஆம் தேதி மேற்கொள்ளப்படும்.

*தேர்தல் – தொழில் நுட்பம் -1(17)*

வாக்காளர்கள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கான பல்வேறு தேர்தல் நடைமுறைகளை எளிதாக்க தேர்தல் ஆணையம், தகவல் தொழில்நுட்பத்தை விரிவான அளவில் பயன்படுத்தி வருகிறது. ஆன் லைன் சுவிதா இணையதளம் மூலமாக வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களையும், பிரமாணப் பத்திரங்களையும் தாக்கல் செய்து வருகின்றனர். பொதுக்கூட்டங்கள் மற்றும் பேரணிகளுக்கான அனுமதிகளும் இந்த இணையதளம் மூலம் வழங்கப்படுகின்றன. முதலில் விண்ணப்பித்தவர்களுக்கு முதலில் அனுமதி என்ற அடிப்படையில், இந்த இணையதளம் செயல்படுகிறது.

வாக்காளர்கள் தங்களுக்கான VHA உதவிச் செயலியின் மூலம், வாக்குச் சாவடி விவரங்களை அறிந்து கொள்ளவும், மின்னணு புகைப்பட

வாக்காளர் அடையாள அட்டை மற்றும் இதர படிவங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளவும், வசதி வழங்கப்பட்டள்ளது.

தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகள் மற்றும் செலவின விதிமுறைகளின் மீறல்கள் குறித்து, பொதுமக்கள் படம் பிடித்து தகவல் தெரிவித்தால், புகார்தாரரின் பெயர் விவரங்களை வெளிப்படுத்தாமல், 100 நிமிடங்களுக்குள் நடவடிக்கை எடுக்கும் வகையில், தேர்தல் கண்காணிப்பிற்கான சி-விஜில் செயலி வடிவமைக்கப் பட்டுள்ளது.

***தேர்தல் – தொழில் நுட்பம் -2(4)***

வேட்பாளர்களுக்கான KYC செயலி மற்றும் Affidavit இணையதளத்தில், வேட்பாளர்களின் பிரமாணப் பத்திரங்கள் இடம் பெற்றுள்ளன. குற்றப் பின்னணி உள்ள வேட்பாளர்கள் இது பற்றிய விவரங்களை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டியதும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

***PIB (13)***

மத்திய தகவல் – ஒலிபரப்பு அமைச்சகத்தின் கீழ் செயல்படும் பத்திரிக்கை தகவல் அலுவலகம், 2024ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் குறித்து செய்தி வெளியிடுவதில் பத்திரிக்கையாளர்களுக்குத் தேவையான எல்லாத் தகவல்களையும் ஒரே இடத்தில் வழங்கும் வகையில், மைக்ரோ இணையதளம் ஒன்றை தொடக்கி உள்ளது. தேர்தல் தொடர்பான பல்வேறு தரவுகள் மற்றும் பகுப்பாய்வுத் தகவல்களும், அனைத்து கட்ட தேர்தலுக்கான கால அட்டவணை, தேர்தல் ஆணைய இணையதளத்தின் பல்வேறு பகுதிகளை அணுகுவதற்கான இணைப்புகளும் இந்த குறுந்தளத்தில் இடம் பெற்றுள்ளன. தேசிய மற்றும் மாநில அளவிலான தேர்தல் அதிகாரிகள் பற்றிய விவரங்களையும், தேர்தலின் போது ஊடகத் துறையினர் செயல்பட வேண்டிய விதம் பற்றிய தேர்தல் ஆணைய அறிவுறுத்தல்களின் தொகுப்பையும், பத்திரிக்கை தகவல் அலுவலகத்தின் குறுந்தளத்தில் காணலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

***தேர்தல் பார்வையாளர் (15)***

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில், தேர்தலுக்கான நடத்தை நெறிமுறைகளின் முறையான அமலாக்கத்தை கண்காணித்து, தேர்தல் நியாயமாகவும், அமைதியான முறையிலும் நடைபெறுவதை உறுதிப்படுத்த தேர்தல் ஆணையம் பொதுப் பார்வையாளர் ஒருவரையும், காவல் பார்வையாளர் ஒருவரையும் நியமித்துள்ளது. பொதுப் பார்வையாளராக IAS அதிகாரி டாக்டர் பியூஷ் சிங்லா, காவல் பார்வையாளராக IPS அதிகாரி திரு. அமர்தீப் சிங் ராய் ஆகியோர் நியமிக்கப் பட்டுள்ளனர். பொதுப் பார்வையாளர், ஜிப்மர் வளாகத்தில் உள்ள, 2ஆவது விருந்தினர் மாளிகையில் இருந்தும், காவல் பார்வையாளர் டூமாஸ் வீதியில் உள்ள போலிஸ் விருந்தினர் மாளிகையில் இருந்தும், செயல் படுவார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது. தேர்தல் தொடர்பாக ஏதேனும் குறைகள் அல்லது புகார்கள் இருந்தால், பொதுமக்கள் இவர்களை, நேரிலோ, தொலைபேசி அல்லது மின்னஞ்சல் வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் என மாவட்டத் தேர்தல் அதிகாரி அலுவலகம் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

***வாக்காளர் கல்வி (13)***

முறையான வாக்காளர் கல்வி, மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான தேர்தல் ஆணையத்தின் SVEEP திட்டத்தின் கீழ், புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் இன்று நேரு யுவகேந்திரா, அரியாங்குப்பம் மல்லக் கம்பம் இளைஞர் மன்றம், மற்றும், அறுபடை வீடு மருத்துவம் சார் கல்லூரியின் இளைஞர் மன்றத்துடன் இணைந்து வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது. மத்திய அரசின் விளையாட்டுத் துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும், நேரு யுவகேந்திரா சங்கதன் அமைப்பின் மாநில இயக்குநர் திரு.குண் அமீது இந்நிகழ்ச்சியை தொடக்கி வைத்தார். 100 சதவிகித வாக்குப் பதிவு மற்றும் ஜனநாயகம் குறித்து, இளைஞர் மன்றத்தினர் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கண்காட்சி ஒன்றையும் அவர் பார்வையிட்டார். புதுச்சேரி மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் வாக்காளர் விழிப்புணர்வு பிரிவு ஒருங்கிணைப்பாளர் திரு. ஜோதி கணேசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*விழிப்புணர்வு வாசகம் -1 (18)*

புதுச்சேரி தலைமைத் தேர்தல் அலுவலர் அலுவலகமும், புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்தின் மண்டல செய்திப் பிரிவும் இணைந்து, புதுச்சேரி மக்களவைத் தொகுதி வாக்காளர்களுக்கான, தேர்தல் விழிப்புணர்வு தமிழ் வாசகம் எழுதுதல் போட்டியை அறிவித்துள்ளன. முறையான வாக்காளர் கல்வி, மற்றும் தேர்தல் பங்கேற்பிற்கான SVEEP இயக்கத்தின் கீழ் இப்போட்டி நடத்தப்படுகிறது.

வாக்காளர் கடமைகள், 100 சதவிகித வாக்களிப்பு, நேர்மையான தேர்தல், தேர்தல் ஆணையத்தின் மொபைல் செயலிகள், ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் தேர்தலின் பங்கு, வாக்குச் சாவடி வசதிகள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்டோர் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வசதி போன்ற கருத்துக்களை மையப்படுத்தி, தமிழில் விழிப்புணர்வு வாசகங்களை, வாக்காளர்கள் இப்போட்டிக்கு அனுப்பி வைக்கலாம். எதுகை – மோனை - சந்தம் போன்ற அம்சங்களுடன், ஓசை நயத்துடனும், புதியதாகவும், புதுமையானதாகவும் வாசகங்கள் இருக்க வேண்டும்.

வாக்காளர்கள் தங்களின் பெயர், முகவரி, மற்றும் மொபைல் எண்ணுடன், அதிகபட்சம் 5 விழிப்புணர்வு வாசகங்களை, 94 43 30 83 76 என்ற வாட்ஸ் அப் எண்ணிற்கு, வரும் ஏப்ரல் 3ஆம் தேதி மாலை 5 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும். சிறந்ததாக தேர்ந்தெடுக்கப்படும்

*விழிப்புணர்வு வாசகம் -2 (4)*

வாசகங்களுக்கு, முதல் பரிசாக ஒருவருக்கு 3 ஆயிரம் ரூபாய், 2ஆம் பரிசாக இருவருக்கு தலா 2 ஆயிரம் ரூபாய், மற்றும் 3ஆம் பரிசாக மூவருக்கு தலா ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப்படும் வாசகங்கள், வாக்காளர் விழிப்புணர்வுக்காக அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப் படும்.

*உயர்நீதிமன்றம் (7)*

மக்களவைத் தேர்தல் வாக்குப் பதிவுக்கும், வாக்கு எண்ணிக்கைக்கும், நீண்ட இடைவெளி உள்ளதால், தமிழகத்தில், வாக்கு எண்ணிக்கையை முன்கூட்டியே நடத்த தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடக் கோரிய வழக்கை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. இந்த வழக்கை விசாரித்த தலைமை நீதிபதி திரு. கங்கா பூர்வாலா தலைமையிலான அமர்வு, தேர்தல் தேதி, வாக்கு எண்ணிக்கை தேதி போன்றவை, தேர்தல் ஆணையத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டவை என்று கூறி, வழக்கை நிராகரித்தது.

*அனுராக் தாக்கூர் (10)*

370ஆவது அரசியல் சாசனப் பிரிவை நீக்கியதன் மூலம், பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு, ஜம்மு-காஷ்மீரின் வளர்ச்சிக்கு, புதிய பாதைகளை திறந்து விட்டிருப்பதாக, மூத்த பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார். இன்று ஜம்முவில் உள்ள ஜஜ்ஜர் கோட்லி பகுதியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 10 ஆண்டு கால தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில், ஜம்மு-காஷ்மீர் எல்லாத் துறைகளிலும், அபார வளர்ச்சி அடைந்து இருப்பதாகக் கூறினார். ஜம்மு – காஷ்மீரில், சட்டம் – ஒழுங்கு நிலவரம் மேம்பட்டதால், ஆயுதப் படைகள் மற்றும் சிறப்புப் படைகளுக்கான தேவையும் குறைந்து இருப்பதாக அவர் தெரிவித்தார்.

*IPL (6)*

IPL கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு ஐதராபாத்தில் நடைபெறும் போட்டியில், ஐதராபாத் – மும்பை அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு சென்னையில், சென்னை – குஜராத் அணிகளுக்கு இடையே நடைபெற்ற போட்டியில், சென்னை அணி, 63 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 23 பந்துகளில் 51 ரன் அடித்த சென்னை அணியின் சிவம் தூபே, ஆட்ட நாயகனாக அறிவிக்கப்பட்டார்.

***கமாண்டர் மாநாடு (17)***

நடப்பு ஆண்டிற்கான ராணுவ கமாண்டர்களின் மாநாடு, நேரடி மற்றும் ஆன் லைன் கலப்பு முறையில், புதுடெல்லியில் நாளை தொடங்க உள்ளது. பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங். ஏப்ரல் 2ஆம் தேதி மாநாட்டின் இறுதி நாளில் உரையாற்றி, மூத்த ராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடத்துகிறார். மாநாட்டின் முதல் நாளில், தலைமை ராணுவ தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே, மண்டல அளவிலான ராணுவ கமாண்டர்களுடன் மெய்நிகர் முறையில் கலந்துரையாடுகிறார். கள அளவில், ராணுவத்தின் செயல்பாடுகளில் தாக்கம் ஏற்படுத்தும் பல்வேறு முக்கிய அம்சங்கள் குறித்தும், முன்னாள் ராணுவத்தினர் நலன் குறித்தும், இந்த ஆலோசனைகளில் முக்கிய கவனம் செலுத்தப்படும். ராணுவத்தின் செயல்திறன் மேம்பாடு, புதுமையாக்கத்தின் முக்கியத்துவம், பயிற்சித் திட்டங்களின் அவசியம், மற்றும், எதிர்கால சவால்களை சமாளிப்பதற்கான தயார்நிலை குறித்து, உயர்நிலை ராணுவ அதிகாரிகள், வரும் 1ஆம் தேதி, பல்வேறு விவாத அரங்குகளை நடத்த உள்ளனர். ஏப்ரல் 2ஆம் தேதி மாநாட்டின் இறுதி நாள் அமர்வில், முப்படைகளின் தலைமை தளபதி ஜெனரல் அனில் சவுகான், கடற்படைத் தலைவர் அட்மிரல் ஹரிகுமார், விமானப் படைத் தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் பி.ஆர்.சவுத்ரி ஆகியோரும் உரையாற்ற உள்ளனர்.

***மாவோயிஸ்ட் (11)***

சத்தீஸ்கரில் பழங்குடியினர் அதிகமுள்ள பஸ்தார் பகுதியில் இன்று பாதுகாப்பு படைகளுக்கும், மாவோயிஸ்ட்டுகளுக்கும் இடையே நிகழ்ந்த துப்பாக்கிச் சண்டையில் 6 மாவோயிஸ்ட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதில் 2 பெண் மாவோயிஸ்ட்டுகளும் அடங்குவர். பீஜப்பூர் மாவட்டம் பஸாகுடா வனப்பகுதியில், மத்திய ரிசர்வ் போலிஸ், மாவட்ட ரிசர்வ் படையினர் மற்றும் கோப்ரா படைப்பிரிவினர் இணைந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்தபோது, மாவோயிஸ்ட்டுகளுடன் மோதல் ஏற்பட்டது. சுட்டுக் கொல்லப்பட்ட 6 மாவோயிஸ்ட்டுகளின் உடல்களும், பெரும் அளவிலான ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளும், சம்பவ

இடத்தில் இருந்து கைப்பற்றப் பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட பகுதியில், தேடுதல் வேட்டை தொடர்கிறது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

தமிழ்நாடு – புதுச்சேரி உட்பட, 21 மாநிலங்களுக்கு உட்பட்ட 102 தொகுதிகளில், ஏப்ரல் 19ஆம் தேதி நடைபெற உள்ள முதல்கட்ட மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல், இன்று பிற்பகல் 3 மணியுடன் முடிவிற்கு வந்துள்ளது.

13 மாநிலங்களைச் சேர்ந்த 89 தொகுதிகளில், ஏப்ரல் 26ஆம் தேதி நடைபெற உள்ள, 2ஆம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல், நாளை தொடங்க உள்ளது.

வாக்காளர்கள், வேட்பாளர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளுக்கான பல்வேறு தேர்தல் நடைமுறைகளை எளிதாக்க, தேர்தல் ஆணையம், தகவல் தொழில்நுட்பத்தை, விரிவான அளவில் பயன்படுத்தி வருகிறது.

புதுச்சேரியில், தேர்தல் நியாயமாகவும், அமைதியாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்த, தேர்தல் ஆணையம், பொதுப் பார்வையாளர் ஒருவரையும், காவல் பார்வையாளர் ஒருவரையும் நியமித்துள்ளது.